20 JUN 2022
சென்னை-600 015

38022

71676/21

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - தூத்துக்குடி மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான திரு.இரா.தங்கவேல்சுவாமி, ஊர்நல அலுவலர் நிலை--I என்பவரின் மனைவி திருமதி.இரா.வான்மதி, இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் - பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.அ.4) துறை**

**அரசாணை (4ப) எண். 25** – **நாள்: 09.06.2022**

**சுபகிருது, வைகாசி –26**

**திருவள்ளுவர் ஆண்டு–2053,**

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
2. தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ந.க.எண்.வ6/28988/2020, நாள் 03.09.2021.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.71676/2021/டி3, நாள் 31.03.2022.

*****

**ஆணை:**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், தூத்துக்குடி மாவட்டம், புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஊர்நல அலுவலர் நிலை–Iஆகப் பணிபுரிந்து 18.10.2020 அன்று காலமான திரு.இரா.தங்கவேல்சுவாமி என்பவரின்

மனைவி திருமதி.இரா.வான்மதி என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, 06.09.2021 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மனைவி திருமதி.இரா.வான்மதி கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 08.12.2020 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 04.06.1993 என்றும், விண்ணப்பம் அளித்த நாளில் தனியரது வயது 27 எனவும், பணி நியமன நாளில் தனியரின் வயது 28 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ள தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரை உரிய அசல் ஆவணங்களுடன் அரசால், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.இரா.வான்மதி என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், இளநிலை உதவியாளர் பதவியில் 06.09.2021 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறையின் அலுவல் சாரா எண்.9083/ட்டி1/2022, நாள் 23.5.2022 மற்றும் மனித வள

மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண்.2490701/G1/2022, நாள் 02.06.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பெ.அமுதா,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை -18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை–15.
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், தூத்துக்குடி மாவட்டம்.

**நகல்:**

திருமதி.இரா.வான்மதி, இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, தூத்துக்குடி மாவட்டம்.
(**வழி**: மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம்.)
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை–9.
உதிரி / இருப்புக் கோப்பு.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்**

மே.கு.ந.க. எண். அ6/28988/2022

மாவட்ட ஆட்சியரகம் (வ.ப)
தூத்துக்குடி.

நகல் அனுப்பப்படுகிறது

M. Bobby 19.7.22
**மாவட்ட ஆட்சியரின்**
**நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)**
**தூத்துக்குடி.**
19/07/22

பெறுநர் :-
திருமதி. இரா.வான்மதி,
இளநிலை உதவியாளர்,
உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), தூத்துக்குடி